Vlambaram - May 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-14 6:43 PM Page 1








35ஆவது ஆண்டில்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்
VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com






நதி: 35 பாலம்: 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2025

# புதிய பாப்பரசர் லியோ XIV

உலகெங்கிலும் உள்ள 1.4 பில்லியன் கத்தோலிக்க மக்களுக்கு புதிய ஆன்மிகத் தலைவராக பாப்பரசர் லியோ XIV 2025 மே 8ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டார். ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 267ஆவது தலைவராக 133 கார்டினல்களால் (Cardinals) தெரிவு செய்யப்பட்ட கார்டினல் ரொபேர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் (Robert Francis Prevost) தனது பாப்பரசரிற்குரிய பெயராக லியோ XIVஐ தேர்ந்தெடுத்தார் (Leo XIV).

பாப்பரசர் லியோ XIVஇனுடைய தெரிவு இரண்டு வரலாற்றுச் சிறப்புகளைப் பதிவு செய்கிறது. கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தத் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய அமெரிக்காவில் (USA) பிறந்த முதலாவது பாப்பரசர் லியோ XIV. மற்றையது கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த அகஸ்டீனியன் பிரிவில் (Augustinian Order)இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாப்பரசர் லியோ XIV ஆவார்.

69 வயது பாப்பரசர் லியோ XIV பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் St.Peter's பசிலிக்காவின் மாடியின் முன்பாகத்தில் (balcony) நின்று வியாழக்கிழமை உரையாற்றும்போது “உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும்” என தனது உரையை ஆரம்பித்தார்.

அவர் தனது உரையை இத்தாலியன், ஸ்பானிஷ் (Spanish) மற்றும் லத்தீன் மொழிகளில் நிகழ்த்தினார். அவர் தனது உரையில், “அன்பான சகோதர, சகோதரிகளே, கடவுளின் மந்தைக்காக தன் உயிரைக் கொடுத்த நல்ல மேய்ப்பரான உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் முதல் வாழ்த்து இது. இந்த அமைதி வாழ்த்து உங்கள் இதயங்களில் நுழைந்து, உங்கள் குடும்பங்கள், எல்லா மக்களையும், அவர்கள் எங்கிருந்தாலும், பூமியெங்கும் உள்ள அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்!

ரோம் நகரை ஆசீர்வதித்த பாப்பாண்டவர் பிரான்சிஸ் உடைய பலவீனமான, ஆனால் எப்போதுமே உறுதியுடன் உரையாற்றிய குரல் இன்னும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ரோம் நகரை ஆசீர்வதித்த பாப்பாண்டவர், அந்த உயிர்தெழுந்த ஞாயிறு காலையில் முழு உலகத்திற்கும் தனது ஆசீர்வாதத்தை வழங்கினார். அதே ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து சொல்ல என்னை அனுமதியுங்கள். கடவுள் நம்மை நேசிக்கிறார். கடவுள் உங்கள் அனைவரையும் நேசிக்கிறார். தீமை ஒருபோதும் வெற்றி பெறாது. நாம் அனைவரும் கடவுளின் கைகளில் இருக்கிறோம். ஆகையால், பயமின்றி கடவுளோடும், நம்மிடையேயும் கைகோர்த்து நாம் முன்னேறிச் செல்கிறோம்.


Pope Leo XIV

Thanks: ALBERTO PIZZOLI / AFP via Getty Images

நாம் கிறிஸ்துவின் சீடர்கள். நான் ஒர் அகஸ்டீனியன். புனித அகஸ்டீனின் (Saint Augustine) மகன். ‘உங்களுடன் நான் ஒரு கிறிஸ்தவர். உங்களுக்காக நான் ஒரு பிஷப் (bishop)’ என புனித அகஸ்டீன் கூறியிருக்கிறார். இந்த அர்த்தத்தில் கடவுள் நமக்காகத் தயாரித்த அந்தத் தாயகத்தை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாக நடக்கமுடியும். நான் உங்களுடன் சேர்ந்து ஜெபிக்க விரும்புகிறேன். இந்தப் புதிய பணிக்காக, முழு திருச்சபைக்காக, உலக அமைதிக்காக நாம் ஒன்றாக ஜெபிப்போம். மேலும், இந்த சிறப்பு அருளுக்காக நமது தாயான மரியாளிடமும் கேட்போம். மரியாளுக்கு வணக்கம்” என்று கூறினார்.

பாப்பாண்டவர் பிரான்சிஸ் அணிந்திருந்ததைப் போலவே இரண்டாம் நாள் காலை வெள்ளிக்கிழமை தனது முதல் திருப்பலியின்போது பாப்பரசர் லியோ அவர்களும் கறுப்பு காலணிகளை அணிந்திருந்தார். பாப்பரசர்கள் பாரம்பரியமாக சிவப்புநிற காலணிகளையே அணிவார்கள். இப்போது பாப்பரசர் லியோவும் அவரது முன்னோடியாக பாப்பாண்டவர் பிரான்சிஸ் இனுடைய எளிமையைத் தேர்ந்து எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

பாப்பரசர்களுடைய பெயர்களின் தெரிவில் முதல் மூன்று இடங்களையும் வகிப்பது John, Gregory மற்றும் Benedict ஆகும். Leo என்னும் பெயர் பாப்பரசர்களின் பெயர்களின் தெரிவில் நாலாம் இடத்தில் உள்ளது. இதற்கு முந்தைய பாப்பரசர் லியோ XIIIஆக இருந்தவர் பிரான்ஸினுடைய ஆட்சிக்குள் இருந்த ரோம் நகரில் 1810ஆம் ஆண்டில் பிறந்தவர் ஆவார். பாப்பரசர் லியோ XIII 1878ஆம் ஆண்டில் இருந்து 1903ஆம் ஆண்டுவரை பாப்பரசராக இருந்தவர். இவர் 25ஆண்டுகள் பாப்பரசராக இருந்தவர். பாப்பரசராக அதிகூடிய காலம் இருந்தவர்களில் நாலாவது இடத்தில் இருக்கிறார்.

கத்தோலிக்க சமூக போதனைகளின் (Social Teaching) பாப்பரசராக லியோ XIII நினைவு கூரப்படுகிறார். இவர் 1891ஆம் ஆண்டு அனைத்து கத்தோலிக்க மக்களுக்கும் ‘புரட்சிகர மாற்றம்’ என்ற பிரபலமான திறந்த கடிதத்தை எழுதி இருந்தார். அதில் தொழில் துறை புரட்சியின்போது (Industrial Revolution) தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அழிவை விவரித்திருந்தார்.

தற்போதைய வத்திக்கானின் செய்தித் தொடர்பாளராக இருக்கும் Matteo Bruni ஊடகவிலாளர்களுக்குத் தெரிவிக்கையில், “லியோ என்ற பெயரை புதிய பாப்பரசர் தெரிவு செய்திருப்பது 1891ஆம் ஆண்டு லியோ XIII தொடங்கிய புரட்சிகர மாற்றத்தின் தொடர்ச்சியை நவீன சமூக கோட்பாட்டில் ஏற்படுத்துவதற்கான தெளிவான குறிப்பு” என்றார்.

மே மாதம் 10ஆம் திகதி பாப்பரசர் லியோ XIV ரோமிற்கு வெளியே Genazzano இல் உள்ள ‘Our Lady of Good Counsel’ தேவாலயத்திற்குச் சென்றார். இங்கு பிரசித்தி பெற்ற மரியாளின் உருவம் உள்ளது. இது பாப்பரசர் லியோ XIVஇனுடைய அகஸ்டீனியன் பிரிவினரால் பராமரிக்கப்படும் தேவாலயம்.

அகஸ்டீனியன் பிரிவினர் (Order of St. Augustine) 2,800இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் 50 நாடுகளில் இருக்கும் ஒரு சர்வதேச மத சமூகமாகும்.

இந்தத் தேவாலயத்திற்குச் சென்ற பின்னர் Santa Maria Maggiore பசிலிக்காவிற்குச் சென்று அங்குள்ள பிரான்சிஸ் இனுடைய கல்லறையில் பிரார்த்தனை செய்தார்.

மறுநாள் வத்திக்கானில் தனது முதலாவது ஞாயிற்றுக்கிழமை உரையின்போது பாப்பரசர் லியோ XIV “இனி போர் வேண்டாம்” என்ற செய்தியை உலகில் உள்ள பலம் வாய்ந்த நாடுகளுக்கு வேண்டுகோளாக விடுத்தார். அவர் தற்போது நடைபெறும் மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ரஷ்யா-உக்கிரைனிற்கான போரில் நீடித்த நிலையான அமைதி உருவாக வேண்டும் என்றார். காசாவில் போர் நிறுத்தம் அமலாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்தியா-பாகிஸ்தானிற்கான மோதலில் சனிக்கிழமை (மே மாதம் 10ஆம் திகதி) ஏற்பட்ட அமைதிக்கான ஒப்பந்தத்தை வரவேற்றார். இந்த ஒப்பந்தம் நீடித்த உடன்பாடு ஆகவேண்டும் என நம்பிக்கை தெரிவித்தார்.

காசாவில் நடைபெற்ற நிகழ்வுகளால் தான் ஆழ்ந்த வேதனை அடைவதாகவும் கூறினார். அங்கு உடனடியாக போர் நிறுத்தம் வரட்டும். பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் அனுமதிக்கப் பட்டும். அனைத்துப் பயணக் கைதிகளும் விடுவிக்கப்பட்டும் என்றார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்













# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separate Entrance

Morningside | Sewells

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old Pickering
Asking $649,900

Vishal Sarda*
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale

GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking

$279k

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Rent

2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / HWY 401

Tridel Building

Gulshan Sharma**
Call : 416 407 5911

## House for Sale

Detached Scarboro
4 BR + 2BR
7 Wash Rooms
Custom Build Basement
Finched Washroom
Kitchen
Walk - up
(Kennedy / Sheppard)

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

To Join
HomeLife/GTA
Realty Inc.
Call at :
416 321 6969
Email:
gtarealty@gmail.com

*One of the Best Brokerage in East Toronto.*

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph*
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Sales Rep.
** Broker

Tel: 416-321-6969

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தேசிய மக்கள் சக்தியின் சறுக்கல்

## – அரவின் –

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கையில் இடம்பெற்றிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், அதன் வெற்றி, எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு மிகப்பெரியளவிலானதாக இருக்கவில்லை.

தேர்தல் முடிவுகள் அந்தக் கட்சிக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. ஏனென்றால் கடந்த 9 மாதங்களுக்குள் இலங்கையில் நடந்திருக்கின்ற மூன்றாவது தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கின்ற வாக்குகள், வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

2024 செப்ரெம்பர் மாதம் நடந்த, ஜனாதிபதித் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு சுமார் 56 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன.

இரண்டு மாதங்கள் கழித்து, 2024 நொவெம்பர் மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு 68 இலட்சத்து 63 ஆயிரம் வாக்குகள் கிடைத்திருந்தன.

ஆனால், இப்போது நடந்திருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்துள்ள வாக்குகள், சுமார் 45 இலட்சம் மட்டுமே.

ஜனாதிபதித் தேர்தலில் 42 சதவீதமாக இருந்த வாக்குகள், நாடாளுமன்றத் தேர்தலில் 62 சதவீதமாக அதிகரித்து, இப்போது, 43 சதவீதமாக குறைந்து இருக்கிறது. இது 9 மாதங்களுக்குள் நிகழ்ந்து இருக்கின்ற ஏற்ற இறக்கம்.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவுக்கு சாதகமான நிலை இருந்தாலும், பெரியளவிலான ஓர் அலை இருக்கவில்லை.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில், அவரைச் சார்ந்த அலை வீசியது உண்மை. அது வடக்கு, கிழக்கையும் விட்டு வைத்திருக்கவில்லை.

அந்த அலை இப்பொழுது பெரும்பாலும் முடிவுக்கு வந்திருக்கிறது.



வடக்கு தவிர பிற பகுதிகளில், தேசிய மக்கள் சக்தி சராசரியாக 18 முதல் 20 சதவீதம்வரை, வாக்குகளை இழந்திருக்கிறது. சில இடங்களில் 24 சதவீதத்துக்கு அதிகமாகவும் இழப்பு நேரிட்டிருக்கிறது. அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் ஒன்பது மாத செயற்பாடுகள் தொடர்பான ஒரு கருத்துக் கணிப்பாக இது பார்க்கப்பட்டது.

அப்படிப்பட்ட தேர்தலில், தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருந்தாலும், குறைந்தபட்ச வெற்றியையே அது பதிவு செய்திருக்கிறது.

இதன் மூலமாக, அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்பார்ப்பு குறைந்திருக்கிறது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீதான நம்பிக்கை குறைந்திருக்கிறது. அதன் மீது திருப்தியற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் முடிவுகள் அதனையே எடுத்துக் காட்டி இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பனவற்றுடன் ஒப்பிடுகின்றபோது, உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைவாகவே இருக்கும்.

ஆனால் 2018 உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன அலை வீசியபோது, 70 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

இந்த முறை வாக்களிப்பு கணிசமாகக் குறைந்து, 62 சதவீதமே வாக்குகள் பதிவாகியிருந்தன.

2015 தோல்விக்கு பின்னர், ராஜபக்சவினர் பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கி, மீண்டும் எழுச்சி பெறுவதற்கு உதவியது, 2018 உள்ளூராட்சித் தேர்தல் தான்.

ஆனால், ஆட்சியைப் பிடித்து ஒன்பது மாதங்களுக்குள்ளாகவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம், வாக்காளர்களிடம் குறைந்திருக்கிறது.

வாக்களிப்பில் அவர்கள் ஆர்வம் காட்டாமல் இருந்தமை இதனையே உணர்த்துகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்ற பின்னர், அவரைப் பலப்படுத்த வேண்டும் - மாற்றத்துக்கான அவரது எண்ணத்துக்கு ஏற்றவாறு, நாடாளுமன்றத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கருத்து வாக்காளர்களிடம் இருந்தது. அது அனுர அலை வீசக் காரணமாயிற்று.

அந்த அலை இப்பொழுது ஓய்ந்து போய்விட்டது என்பதையே நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

சில மாதங்களுக்குள் கிட்டத்தட்ட 23 இலட்சம் வாக்குகளை தேசிய மக்கள் சக்தி இழந்திருக்கிறது.

இது சாதாரணமான ஒன்று அல்ல. 20 சதவீதத்துக்கும் சற்று குறைவான வாக்குகளை அந்தக் கட்சி பறிகொடுத்திருக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு இம்முறை கிடைத்த வாக்குகளுடன் இது நெருங்கியதாகக் காணப்படுகிறது. இதிலிருந்தே இதன் பாரதூரத்தன்மையை புரிந்து கொள்ளலாம்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி இந்தச் சூழலை சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை நியாயப்படுத்த முற்பட்டிருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் வேறு, நாடாளுமன்றத் தேர்தல் வேறு, உள்ளூராட்சித் தேர்தல் வேறு என்று, ஒரு பாடம் எடுத்திருக்கிறார் பிமல் ரத்நாயக்க.

ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வாக்குகள் 43 சதவீதத்தில் இருந்து, நாடாளுமன்றத் தேர்தலில் 69 சதவீதமாக அதிகரித்த போது, அதனை மிகப்பெரிய வெற்றியாகக் காட்டிக்கொண்டது தேசிய மக்கள் சக்தி.

அந்த இரண்டு தேர்தல்களையும் அவர்களால் ஒப்பீடு செய்ய முடியும் என்றால், உள்ளூராட்சித் தேர்தலை மட்டும் எவ்வாறு ஒதுக்கி வைக்க முடியும்? தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் நம்பிக்கை பல்வேறு காரணங்களால் குறைய தொடங்கி இருக்கிறது. அதன் பிரதான பிரச்சினை, வாக்குறுதிகளை நிறைவேற்றாமை ஆகும்.

பொருளாதாரரீதியாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மாத்திரமன்றி, அரசியல் வாக்குறுதிகளும், நிர்வாக ரீதியான வாக்குறுதிகளும்கூட, அந்தக் கட்சியினால் நிறைவேற்றப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி, அரசியல் மாற்றத்தைப்பற்றி, முறைமை மாற்றத்தைப் பற்றி, மிகப்பெரியளவில் பேசியது. வாக்குறுதிகளை அள்ளி வீசியது. ஆனால் அந்த மாற்றத்தை யாராலும் உணரவே முடியவில்லை.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, நாட்டில் துப்பாக்கிச் சூடுகளும் படுகொலைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அதற்கு அரசாங்கம் சரியாகப் பதிலளிக்கவில்லை.

விலைவாசி குறையவில்லை, மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கப் போவதாக அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது, பணத்தின் மதிப்பு குறைகிறது. பொருட்களின் விலைகள் உயருகின்றன, உப்புகூட, கிலோ 350 தொடக்கம் 500 ரூபாவரை விற்கின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது, அரசாங்கத்தின் கையிருப்புச் சொத்துகள் குறைகிறது, இவ்வாறாக பொருளாதாரரீதியாக மக்களால் எந்தப் பயனையும் பெறக்கூடிய நிலை ஏற்படவில்லை.

குறுகிய காலத்தில் அரசாங்கம் செல்வாக்கை இழக்கத் தொடங்கி இருப்பது, நல்லதொரு அறிகுறி அல்ல.

அதேவேளை, இந்த அரசாங்கத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவிற்கு, ஐக்கிய மக்கள் சக்தி தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை.

பொதுத்தேர்தலில் 20 இலட்சத்துக்கும் சற்றுக் குறைவான வாக்குகளை பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சக்தி, இம்முறை 22.5 இலட்சம் வாக்குகளை பெற்றிருக்கிறது.

சுமார் நான்கு சதவீதம் வாக்குகளை அதிகம் பெற்றிருந்தாலும், வலுவானதொரு எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தன்னை கட்டியெழுப்பத் தவறியிருக்கிறது. இது ஆளும் கட்சிக்கு இன்னமும் சாதகமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. அதேவேளை, மிகக் குறுகிய காலத்தில் தங்களை வலுப்படுத்தி இருப்போர் ராஜபக்சவினர் தான்.

ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் இடையில் அவர்களால் தங்கள் வாக்கு வங்கியை உயர்த்த முடியவில்லை. ஆனால் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலில் தமது வாக்கு வங்கியை மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றனர்.

மூன்றரை இலட்சம் வாக்குகளை பெற்றவர்கள் ஒன்பது இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றிருக்கின்றனர்.

மூன்று சதவீதத்தில் இருந்து அவர்கள் தங்களது வாக்கு வங்கியை 9 சதவீதமாக உயர்த்தியிருக்கின்றனர்.

இது அவர்களை உற்சாகப்படுத்தி இருக்கிறது. இந்த வெற்றியோடு, சூட்டோடு

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# புதிய பாப்பரசர்....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

புதிய பாப்பரசர் லியோ XIV தனது முதலாவது ஞாயிற்றுக்கிழமை உரையில் மேலும் தெரிவிக்கையில், "செயற்கை நுண்ணறிவு மற்றும் பிற விஞ்ஞான முன்னேற்றங்களின் வளர்ச்சியால் மனித கண்ணியம் (Human Dignity) மற்றும் நீதியைப் பாதுகாக்க இக்காலகட்டத்தில் தேவாலயங்கள் அத்தியாவசியமானவை" என்றார்.

புதிய பாப்பரசரின் நம்பிக்கைகள் கொள்கைகளை மேற்கோள்காட்ட ஊடகங்கள் அவருடைய முந்தைய சமூக வலைத்தளப் பதிவுகளை மீள்பதிவு செய்து தமது கருத்துகளை வெளியிடுகின்றன.



Pope Leo XIV greets the public from St. Peter's Basilica. Thanks: Alberto Pizzoli/AFP via Getty Images



Pope Leo XIV at the Shrine of Our Lady of Good Counsel in Genazzano. The shrine is run by the pope's Augustinian confreres. Thanks: CNS photo/Vatican Media



People gathered in St. Peter's Square to hear Pope Leo's first Sunday address as pontiff. Thanks: Marko Djurica/Reuters

கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப் பரவலின்போது தடுப்பூசிக்கு ஆதரவான செய்திகளை அவர் தனது சமூகவலை தளத்தில் வெளியிட்டிருந்தார்.

அதேபோல் George Floydஇன் கொலையின் பின்னர் நடைபெற்ற 'Black Lives Matter' போராட்டங்களுக்கு ஆதரவான செய்திகளை அவர் தனது சமூகவலைதளத்தில் வெளியிட்டிருந்தார்.

"இனவெறியை நிராகரித்து நீதி தேடுவதற்கு தேவாலயங்களில் உள்ள தலைவர்களிடம் இருந்து அதிக அளவு ஆதரவுக் குரல்கள் வரவேண்டும்" என 2020ஆம் ஆண்டில் அவர் தனது சமூகவலைதளத்தில் பகிர்ந்திருந்தார்.

வத்திக்கான் ஊடகவியலாளர்களால் வெளியிடப்பட்டுள்ள ஓர் அறிக்கையின்படி லியோவும், பிரான்ஸிஸ்ஐப் போலவே சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, புலம் பெயர்ந்தோர் மற்றும் ஏழைகள் தொடர்பான விடயங்களில் ஒரேவிதமான முன்னுரிமைகளை பகிர்ந்து கொள்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

2025 மே 18ஆம் திகதி லியோ உத்தியோகபூர்வமாக பாப்பரசராகப் பதவி ஏற்க உள்ளார். அப்போது அவர் St. Peter's சதுக்கத்தில் தனது தொடக்க பொது திருப்பலியை நடத்துவார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது. அன்று காலை லியோவின் திருச்சபை பதவியின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் வத்திக்கானில் சிறப்பு திருப்பலி நடைபெறும். இந்நிகழ்வில் கனடியப் பிரதமர் மார்க் காணியும் நேரடியாகக் கலந்து கொள்வார்.

Robert Francis Prevost 1955ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி அமெரிக்காவின் Illinois மாநிலத்தில் உள்ள Chicagoஇல் பிறந்தார். இவரது தாயார் Mildred Prevost, Depaul பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரி ஆவார். இவரது தந்தையார் Louis Marius Prevost அமெரிக்கக் கடற்படையில் இரண்டாம் உலகப் போரின்போது பணிபுரிந்தவர். Robert Francisஇற்கு Louis மற்றும் John என இரண்டு அண்ணர்கள் இருக்கின்றனர்.

ரொபேர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் தனது உயர்தரக் கல்வியை St. Augustine Seminary High Schoolஇல் Michigan மாநிலத்தில் பயின்றார். பின்னர் Villanova பல்கலைக் கழகத்தில் கணிதப்பிரிவில் இளநிலை விஞ்ஞான மானிப் பட்டம் பெற்றார். 1982ஆம் ஆண்டில் சிகாகோவில் உள்ள கத்தோலிக்க இறையியல் ஒன்றியத்தில் இருந்து (Theological Union) தெய்வீக முதுகலைப்பட்டம் (Master of Divinity) பெற்றார்.

ரொபேர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் தனது படிப்பின்போதே சிகாகோவில் உள்ள St. Rifa of Cascia உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் பௌதீக வியல் மற்றும் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். கிறிஸ்தவ அமைப்புகள் சம்பந்தப்பட்ட Canon Lawஇல் Saint Thomas Aquinas பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தை 1989ஆம் ஆண்டில் பெற்றார்.

ரொபேர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் ஒரு நேர்காணலின்போது தனது தந்தையார் பிரஞ்ச் மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றும் தாயார் ஸ்பானிஷ் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்துள்ளார். அவர் தனது தாய்வழிப் பேரனும், பேர்த்தியும் அமெரிக்காவிற்கு Haitiஇல் இருந்து குடிபெயர்ந்தவர்கள். அவர்கள் முதலில் New Orleansஇல் குடியேறி வாழ்ந்தனர் எனவும் பின்னர் சிகாகோவிற்கு இடம்பெயர்ந்தனர் எனவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தங்கள் வீடு எப்போதும் இசையாலும், தாயினுடைய சமையல் திறமையாலும் நிரப்பப்பட்டிருக்கும் என்றார்.

ரொபேர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் 1977ஆம் ஆண்டிலேயே Order of Saint Augustineஇல் சேர்ந்து கொண்டார். 1982 ஆம் ஆண்டில் ரோமில் உள்ள அகஸ்டீனியர்களுக்காகப் பேராயர் Jean Jadotஆல் பாதிரியாராக நியமிக்கப் பட்டார். பின்னர் 1985ஆம் ஆண்டில் பெரு (Peru) நாட்டில் உள்ள அகஸ்டீனியர் பிரிவில் சேர்ந்தார். 1987இல் திரும்பவும் Illinois இற்கு வந்து அங்கும்



Pope Leo XIV speaking on Sunday from the balcony of St. Peter's Basilica. Thanks: Dan Kitwood/Getty Images

Wisconsinஇலும் Augustinian Novitiate ஆசிரியர்களுடன் பணியாற்றிய பின்னர் மீண்டும் 1988இல் பெருவிற்கு திரும்பினார்.

பெரு நாட்டில் Trujilloஇல் உள்ள அகஸ்டீனியன் பாடசாலையில் பலகாலம் பணிபுரிந்தார். மறைமாவட்ட பாடசாலை களில் Canon சட்டத்தைக் கற்பித்தார்.



Pope Leo XIV is giving his first Sunday address Thanks: Just Jared

பிராந்திய திருச்சபை நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் இருந்தார். 2014ஆம் ஆண்டில் பாப்பாண்டவர் பிரான்ஸில்ஆல் பிஷப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்காக அவர் பெருநாட்டின் குடிமகனாகினார். 2023இல் பாப்பாண்டவர் பிரான்ஸிஸ் அவர்கள் Robert Francis Prevostஐ பேராயர் ஆக்கினார். அதன் பின்னர், அவ்வாண்டு இறுதியில் கார்டினல் ஆக்கினார். 2025 பெப்ரவரியில் பாப்பாண்டவர் பிரான்ஸிஸ் அவரைக் கார்டினல் பிஷப் ஆக்கினார்.



Pope Leo XIV leaves after concelebrating Mass with the College of Cardinals. Thanks: Vatican Media/AP

2025 மே 8ஆம் திகதி நடைபெற்ற பாப்பரசர் தெரிவிற்கான நான்காவது வாக்கெடுப்பில் ரொபேர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டார்.

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வெற்றியா?

**– முகிலன் –**

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய எதிரியுடன், மோதி பின்னடைவைச் சந்தித்த, தமிழ்த் தேசியக் கட்சிகள், உள்ளூராட்சித் தேர்தலில் தங்களை ஓரளவுக்கு மீளமைத்துக் கொண்டிருக்கின்றன.

மே 6ஆம் திகதி நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு முழு அளவில் இல்லா விட்டாலும், ஓரளவுக்குத் திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்தல் முடிவு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருந்திருக்கிறது.

ஏனென்றால் இந்தத் தேர்தலில், தமிழரசுக் கட்சிக்கு ஒட்டுமொத்தமாக, 307,657 வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

கடந்த நொவெம்பர் மாதம் நடந்த பொதுத்தேர்தலில், தமிழரசுக் கட்சியினால் 257,813 வாக்குகளையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இந்தத் தேர்தலில், தமிழரசுக் கட்சியின் வாக்குகள், 50 ஆயிரத்தினால் அதிகரித்திருக்கிறது. அதுமாத்திரமன்றி போட்டியிட்ட 58 உள்ளூராட்சி சபைகளில் 40 சபைகளில் ஆட்சியமைக்கத் தகுதி பெற்றிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் உள்ளகக் குழப்பங்கள், தற்போதைய தலைமைத் துவம் மீதான அதிருப்திகள் என்பன அதன் வாக்குகளில் சரிவை ஏற்படுத்தலாம் என்ற கருத்து நிலவியது. அதற்கு மாறாக தேர்தல் முடிவு அமைந்திருப்பது, பரவலான ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பொதுத்தேர்தலுக்குப் பிறகு தமிழரசுக் கட்சி 54 ஆயிரம் வாக்குகளை மேலதிகமாக பெற்றிருக்கிறது. அதன் வாக்குகள், கிட்டத்தட்ட இரண்டு மடங்காகியிருக்கிறது.

ஆனால், வடக்கு-கிழக்கு முழுவதும், தமிழரசுக் கட்சிக்கு மேலதிகமாகக் கிடைத்துள்ள வாக்குகள் 50,000 மட்டுமேயாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 54,000 மேலதிக வாக்குகளை அந்தக் கட்சி பெற்றிருந்தாலும், பிற பகுதிகளில் அதன் வாக்குகள், நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், 4 ஆயிரத்தினால் குறைந்திருக்கிறது. இதனை அந்தக் கட்சி ஆரோக்கியமான விடயமாகக் கருதமுடியாது.

குறிப்பாக, வவுனியா, மன்னார் பகுதிகளில், தமிழரசுக் கட்சி மோசமான பின்னடைவை எதிர்கொண்டிருக்கிறது. வவுனியா, மாவட்டத்தின் மீதான முழுமையான ஆளுகையையும் தமிழரசுக் கட்சி இழந்திருக்கிறது. வவுனியா நகரசபையில் நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வவுனியா, வடக்கு பிரதேசசபையை தேசிய மக்கள் சக்தியிடம் பறிகொடுத்து இருக்கிறது.

மன்னார் மாவட்டத்திலும் தமிழரசுக் கட்சி மூன்றாம் இடத்தையே பிடித்திருக்கிறது. மாந்தை மேற்கு பிரதேச சபை தவிர, மற்ற சபைகளை தேசிய மக்கள் சக்தியிடமோ ஐக்கிய மக்கள் சக்தி இடமோ இழந்திருக்கிறது.




இந்த இரண்டு மாவட்டங்களும் தமிழரசுக் கட்சிக்கு கடும் சவாலை ஏற்படுத்தி இருக்கின்றன.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், சுமார் 5,000 வாக்குகள் குறைவாகவே பெற்றிருக்கிறது ஆனால் இரண்டு உள்ளூராட்சி சபைகள் தவிர, மற்றையவற்றை அது தன்வசப்படுத்தி இருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழரசுக் கட்சி மூன்று பிரதேசசபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. அதேபோல, அங்கும் சிறியளவில் வாக்குச்சரிவை எதிர்கொண்டிருக்கிறது. அம்பாறை மாவட்டத்திலும், அதேநிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் 54,000 மேலதிக வாக்குகளைப் பெற்றிருந்தும், அதன் வாக்குகள் பெரியளவில் அதிகரிக்காமல் போனதற்கு இதுவே காரணம்.

தாங்கள் வீழ்ச்சி அடையவில்லை, தங்களின் செல்வாக்கு உடையவில்லை என்று, அந்தக் கட்சி தற்போது கூறிக்கொண்டாலும, அது தன்னை மறுசீரமைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை உணர்த்தியிருக்கிறது இந்தத் தேர்தல்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சி என்னதான் தவறுகளை இழைத்திருந்தாலும், அதனுடன் ஒன்றித்துப் போவதற்குத் தயாராக இருக்கின்றனர் என்பதை, இந்தத் தேர்தல் வெளிக்காட்டி இருக்கிறது. அதேபோல, தேசிய மக்கள் சக்தியின் திடீர் எழுச்சி, அதனால் ஏற்பட்ட ஆபத்தான சூழல், அது ஏற்படுத்தி வந்த அச்சுறுத்தல் என்பன, தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய மக்கள் மத்தியில், எரிச்சலை ஏற்படுத்தியது.

அதனை நோக்கியே எதிர்ப் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. அந்தப் பிரச்சாரங்கள், தமிழரசுக் கட்சிக்கு நன்றாகவே கைகொடுத்திருக்கிறது.

பேரினவாதக் கட்சியா, தமிழ்த் தேசிய கட்சியா என்ற ஒரு போட்டியில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனால் இது நிரந்தரமானதா?

தமிழரசுக் கட்சி, தன்னை மாற்றிக் கொண்டு, தமிழ்த் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்குவதற்கு தயாராக வேண்டிய நிலையில் இருக்கின்றது.

இந்தச் செய்தியை அந்தக் கட்சியே புரிந்து கொண்டால், ஏனைய தரப்புகளுடன் இணைந்து செயற்படுவதற்கு, அது தன்னை தகவமைத்துக் கொண்டால், தப்பிப் பிழைத்துக் கொள்ளும்.

இந்தத் தேர்தலில் அதிகம் எதிர்பார்க்கப் பட்டது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். தமிழ் தேசிய பேரவை என்ற பெயரில், உடைந்து போன கட்சிகளின் அணிகளுடன் அது கூட்டமைப்பை உருவாக்கியிருந்தது.

அந்தக் கூட்டு வல்வெட்டித்துறை நகர சபையில், சாவகச்சேரி நகரசபையில், பருத்தித்துறை நகர சபையில், முதன்மைக் கட்சியாக வெற்றி பெற உதவியிருக்கிறது.

வேறு சில பிரதேசசபைகளிலும் அதற்குக் கை கொடுத்திருக்கிறது. சில இடங்களில் அது வெற்றியளித்து இருந்தாலும் ஒட்டுமொத்தமாக அதற்கு பெரியளவில் வெற்றியைக் கொடுக்கவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 28 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற அந்தத் தமிழ் காங்கிரஸ், இம்முறை 55 ஆயிரம் வாக்குகளைத் திரட்டியிருக்கிறது.

வன்னியிலும் அதன் வாக்கு வங்கி சுமார் 2000 வாக்குகளால் அதிகரித்திருக்கிறது.

மட்டக்களப்பிலும் வாக்குகள் இரண்டு மடங்காகி இருக்கின்றன. திருகோணமலையில் சில ஆசனங்களையும் பெற்றிருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்தமாக அது பெரும் வெற்றியைப் பெறவில்லை. இன்னமும் உழைக்க வேண்டிய நிலையில், அந்தக் கட்சி இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தனது நிலைப்பாடுகளை மீளாய்வு செய்யத் தயாராக இருப்பதாக சமிக்ஞையை வெளிப்படுத்தியது.

பிற தமிழ்த் தேசிய தரப்புகளுடன் ஒத்துழைத்து கூட்டணி அமைத்து செயற்படுவதற்கான பச்சைக்கொடியைக் காட்டிய போதும், ஏனைய தரப்புகள், சரியாக ஒத்துழைத்திருக்கவில்லை.

அதேபோல, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒப்பீட்டளவில் நாடாளுமன்றத் தேர்தலைவிட இரண்டு மடங்கு வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் 22 ஆயிரம் மேலதிக வாக்குகளையும் வன்னியில் 5 ஆயிரத்திற்கு மேலதிக வாக்குகளையும் பெற்றிருந்தாலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அதற்கு இருந்து வந்த செல்வாக்கு சரிந்திருப்பதை இந்த தேர்தல் எடுத்துக்காட்டியிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வாக்குகள், பாதியாகக் குறைந்து போயிருக்கிறது.

தமிழ் மக்கள் கூட்டணியைப் பொறுத்த வரையில் நான்கு சபைகளில் மாத்திரம் போட்டியிட்டது.

ஆனால், அந்த நான்கு சபைகளிலும், கிடைத்த வாக்குகள், கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சி பெற்ற வாக்குகளைவிட அதிகம். இது அந்தக் கட்சிக்கு ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயம்.

ஒட்டுமொத்தமாக, தமிழ்த் தேசியக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சிகளை வீழ்த்தி தன்னை நிலைப்படுத்த முயன்ற தேசிய மக்கள் சக்திக்கு, நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த 81 ஆயிரம் வாக்குகள், 67 ஆயிரமாக சரிந்திருக்கிறது.

வன்னியில் அந்தக் கட்சி, சுமார் 1700 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று இருக்கிறது.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்ற 67 ஆயிரம் வாக்குகள் என்பது சாதாரணமான விடயம் அல்ல.

தமிழ்க் கட்சிகள் தங்களைத் தயார்ப் படுத்திக் கொள்ளாவிட்டால், அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்குள் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், தேசிய மக்கள் சக்தி என்ற அச்சுறுத்தல் நீடிக்கவே செய்யும்.

தேசிய மக்கள் சக்தி நாட்டின் பிற பகுதிகளில், 18 சதவீதம்வரை வாக்குகளை இழந்திருக்கிறது, ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் சுமார் 4 சதவீத வாக்குகளையே பறிகொடுத்திருக்கிறது. அப்படியானால், அது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சவாலான ஒரு தரப்பாக மீண்டெழக்கூடிய சாத்தியங்கள் இருப்பதை மறுக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்கள் முரண்பாடுகளை மறந்து, குறுகிய காலத்துக்குள், கொள்கை ரீதியான நிலைப்பாடு ஒன்றுக்குள் வரவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியிருக்கிறது இந்தத் தேர்தல் முடிவு.

# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 3

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

சென்ற வாரம் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மகத்தான சங்க பாடலை குறித்து சில வரிகள் எழுதி இருந்தேன். அப்பாடலின் முதல் வரி குறித்த ஒரு மாறு பட்ட விளக்கத்தை ஒரு பேரறிஞர் மூலம் கற்று, அறிந்து கொண்டேன். அது குறித்த ஒரு சிறு விளக்கத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நாம் அனைவரும் பொதுவாக இந்தப் பாடலின் முதல் வரிக்கு "எல்லா ஊரும் எனது ஊரே, அனைத்து மக்களும் எனது உறவினரே" என்று பொருள் கொள்வோம். ஆனால் "யாது உன் ஊர்? உனது கேளிர் யாவர்?" என்று பிரித்து படித்து பொருள் கொள்வோமேயானால், இப்பாடலின் தொடர்ந்து வரும் வரிகளின் பொருளை மேலும் ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். உனக்கு ஊரும், உறவினரும் இல்லை அல்லது ஏது என்று பொருள் கொள்வோமேயானால், அடுத்து" நான் யார்?" என்ற வாழ்வின் மிக ஆழமான, முக்கியமான கேள்வியை நாம் எதிர்கொள்ள வேண்டி வரும். நம்மில் பலரும் இந்த இடத்திற்குச் செல்லவே விரும்புவதில்லை. ஆனால் உலகின் அனைத்து தத்துவங்களும், ஆன்மீகப் பயணங்களும் இந்தக் கேள்வியிலேயே ஆரம்பிக்கின்றன இந்த விடயத்தைச் சற்று உற்று நோக்குங்கள்.

சென்ற வாரம் நல்வாழ்வுப் பயிற்சியாளர் தனது வாடிக்கையாளரிடம் பல கேள்விகளை எழுப்பி அவற்றுக்கான பதில்களுடன் அடுத்த அமர்வுக்கு வரச் சொல்லி இருந்தார். தனது 50ஆவது வயதில் வாழ்வு சலிப்பாக இருக்கிறது என்ற வாடிக்கையாளர், பயிற்சியாளரின் கேள்விகளுக்கு பதில்களை யோசித்து வைத்திருந்தார். எதனால் தனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்த டென்னிஸ் விளையாட்டை விட்டு விட்டோம் என்பதற்கான காரணங்களையும் தற்போது எதனால், எந்த நேரங்களில், எந்த விதமான தூண்டுதல்களால் தனக்கு சலிப்பு ஏற்படுகிறது என்பது குறித்து ஓரளவு அவருக்கு புரிதல் இப்போது இருந்தது. அது குறித்து விவரமாக பயிற்சியாளர் உடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.

"டென்னிஸ் விளையாட உடல் நலம் தகுதியாக இல்லை. தற்போது வாழ்க்கைப் பயணம் இலகுவாக சென்று கொண்டிருக்கிறது. எதிர்காலம் குறித்து தெளிவாகத் திட்டமிட்டு தேவை யான சேமிப்புகள் உள்ளன. வாழ்க்கைத் துணைவரும் வேலைக்குச் செல்கிறார். அவர்கள் இருவரும் ஒன்றாக ஓய்வாக மகிழ்ச்சியாக இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் வாய்ப்பதில்லை." இந்த இடத்தில் பயிற்சியாளர் தனது எண்ணத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

சந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லையா அல்லது அவற்றை உருவாக்கும் முயற்சிகள் குறைவாக உள்ளனவா என்ற கேள்வியை எழுப்புகிறார்.

வாடிக்கையாளர் பதிலுக்கு "நாங்கள் இருவர் மட்டுமே ஒன்றாக ஒரு விடுமுறை பயணம் சென்றோம். பயணத்திற்கான தயாரிப்புகள், பயணங்கள் அனைத்துமே எங்கள் இருவரையும் களைப்புற செய்து விட்டன. மேலும் பிள்ளைகள் இல்லாததும் ஒரு குறையாக இருந்தது" என விடுமுறை ரசிக்காமல் போனதற்கான காரணங்களை அடுக்கினார்.

பயிற்சியாளர் விடுமுறை பயணங்கள் அல்லாமல் வேறு எந்த செயல் உங்கள் இருவருக்கும் ஒன்றாக மகிழ்ச்சி அளிக்கக் கூடியது என்று வினவினார்.

இருவருக்குமே சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு இருவருமே ஓரளவு நன்றாக பாடக்கூடியவர்கள்தான் என்று கூறும்போதே வாடிக்கையாளரின் முகத்தில் பெரும் மலர்ச்சி ஏற்பட்டது. இப்போதுகூட சில தனிப்பட்ட சேர்ந்திசை குழுக்களில் பாடலாம் என்று நானும், எனது துணைவியரும் பேசிக் கொள்வது உண்டு.

உங்களுக்கு இசை மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியது போல தெரிகிறதே என்று பயிற்சியாளர் அடுத்த கட்ட கேள்வியைக் கேட்க வாடிக்கையாளர் அதைக் குறித்து தொடர்ந்து விவரமாக பேச ஆரம்பித்தார்.

தனக்கும் துணைவியருக்கும் பாடல்கள் கேட்பது மற்றும் புல்லாங்குழல் இசை கேட்பது மிகவும் விருப்பமான ஒரு பொழுதுபோக்காகும் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இப்பொழுது பயிற்சியாளர் அவரை இந்த பொழுதுபோக்கையே தங்களது வாழ்வின் சலிப்பைப் போக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக்கொண்டு அவற்றில் முழுமையாக ஈடுபடுவதற்கான செயல்முறைகளை பரிந்துரைத்தார். வாடிக்கையாளருக்கும் அவை முயற்சி செய்ய வேண்டிய ஒரு வழிமுறையாகவே இருந்தது.

பயிற்சியாளர் நமது பொழுதுபோக்குகளின் பெயர் என்ன தெரியுமா என்று கேட்க ஆங்கிலத்தில் Recreation என்று வாடிக்கையாளர் பதில் கூறினார்.

வாழ்வை re-create செய்வது என்பதே அதற்கு அர்த்தம் என்று பயிற்சியாளர் ஒரு புது பொருளை விளக்கிக் கூற வாடிக்கையாளருக்கு ஆச்சரியம் மட்டும் அன்றி இந்தப் புது பொருள் மிகவும் பிடித்திருந்தது.

இவற்றை செயல்படுத்த தொடங்கி விட்டு அவற்றின் பலன்களுடன் உங்களை மீண்டும் சந்திக்கிறேன் என்று அவர் இந்த அமர்வை முடிவுக்கு கொண்டு வருகிறார். கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறுகிறார்;

"ஒரு வேலையின் மிக முக்கியமான பகுதி அவ்வேலையை முதலில் ஆரம்பிப்பதே ஆகும்"

நமது வாடிக்கையாளர் ஆரம்பித்தாரா என்பதை அடுத்த பகுதியில் பார்க்கலாம் நண்பர்களே!

# பூமியில் விழப்போகும் சோவியத் விண்கலம்



குரு அரவிந்தன்

சோவியத் ஒன்றியத்தால் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் ஏவப்பட்ட விண்கலம் ஒன்று தோல்வியடைந்ததால், மீண்டும் பூமியை நோக்கி அதிவிரைவாக வருவதாகவும், இந்த வார இறுதியில் பூமியில் வந்து விழலாம் என்றும் விண்வெளி நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர். ஆனால் அது எந்தப்பகுதியைத் தாக்கப் போகிறது என்பது இன்னும் தெளிவாகக் கணிக்கப்படவில்லை.

காஸ்மோஸ் 482 என்று பெயரிடப்பட்ட இந்த விண்கலம் 1972ஆம் ஆண்டு வீனஸ் என்று சொல்லப்படுகின்ற வெள்ளிக் கிரகத்தை நோக்கி ஏவப்பட்டது. அப்போது இரண்டு விண்கலங்கள் ஏவப்பட்டாலும், ஒன்று தோல்வியடைய மற்றது வி71-670 வீனஸ் கிரகத்தைச் சென்றடைந்தது. ஆனாலும் வி71-671 என்ற இந்த விண்கலம் வீனஸ் பரிமாற்றப் பாதையில் செல்வதற்கு போதுமான வேகத்தை அடையவில்லை என்பதால், பூமியின் சுற்றுப்பாதையை விட்டு அதனால் வெளியேற முடியாமல் பூமியைச் சுற்றிக் கொண்டிருந்தது.




இது உடைந்தபோது, இரண்டு பெரிய துண்டுகள் பூமியின் உயர்ந்த சுற்றுப் பாதையில் சிக்கிக்கொண்டன. அவற்றை விண்வெளிக் குப்பை என்று சொல்வார்கள். அவற்றில் சுமார் 1,100 இறாத்தல் எடையுள்ள ஒரு துண்டுதான் மே மாதம் 10ஆம் திகதி வரையில் பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. காஸ்மோஸ் 482 தரையில் மோதினால், அது 52 டிகிரி வடக்கு மற்றும் 52 தெற்கு அட்சரேகைகளுக்கு இடையில் பூமியில் விழ வாய்ப்புள்ளது.

பூமியை விட 90 மடங்கு அடர்த்தியான வீனஸ் கிரகத்தின் வளிமண்டலத்தில் நுழைவதற்கு ஏற்றவகையில் இந்த விண்கலம் தயாரிக்கப்பட்டதால், பூமிக்குத் திரும்பும்போது வளிமண்டல உராய்வு காரணமாக எரிந்து போவதற்கான சாத்தியம் மிகக் குறைவானது என்றே கருதுகின்றனர். தற்போது 1.2 மில்லியன் குப்பைகள் விண்வெளியில் இருப்பதாகக் கணித்திருக்கின்றனர். தற்செயலாக உங்கள் பகுதியில் விழுந்தால் அதற்கு அருகே செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.



Vlambaram - May 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-05-14 6:43 PM Page 8



# தோல்வி என்பது முடிவல்ல..



யதுசனா சவுந்தரராசா
யாழ்ப்பாணம்

வாழ்க்கை என்பது ஓர் அழகான மெதுவான நீண்ட பயணம். இதில் எல்லாப் படிக்கற்களும் எம் எண்ணம் போல அமைந்து விடுவதில்லை. சில நாள் வர்ணஜாலம்போல வெற்றியால் குவியும், சில நாட்களில் தோல்வி தோளில் சாயும். எவ்வாறு புயல் வந்த போதிலும் வாழ்க்கைப் பயணத்தின் மாலுமி பயணத்தைக் கைவிட்டு விடுவதில்லை. தோல்வி என்பது ஒரு தடையுமில்லை. எம் முயற்சியை உயர்த்தவும் திறனைப் பலப்படுத்தவுமான ஒரு சிறிய இடைவெளியே. இதை நாம் எப்படி நோக்குகின்றோம், எவ்வாறு எதிர்கொள்கின்றோம் என்பதே முக்கியம். சில வேளைகளில் அது நம்மைச் சோர வைக்கும் ஆனால் நம்மை மேலும் பலப்படுத்தும் ஆயுதமாகக் கையாள்தலே வெற்றியின் பாதைக்கு வழிவகுக்கும். அத்தகைய தோல்வியையும் அதன் பின்னணியில் ஒளிந்திருக்கும் வாழ்க்கைப் பாடங்கள் பற்றியும் சிந்திப்போம்..

வெற்றி என்பது நம் சமூகத்தில் எப்போதும் கொண்டாடப்படும் ஒன்று. சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வெற்றியின் மகத்துவத்தை எப்போதுமே புகழ்ந்து பறைசாற்றியவாறு இருக்கும். ஆனால் உலகமே போற்றிக் கொண்டாடும் பல உயர் மகான்களும் மேதைகளும் ஒரே தடவையில் தம் வெற்றிக் கனியைச் சுவைத்து விடவில்லை. அவர்களது வாழ்க்கை ஒரே நேர்கோட்டில் தடங்கலற்ற பயணமாக இருந்து விடவில்லை. திரும்பி வளைந்து பலமுறை வழிமறிக்கப்பட்டு மறுபடியும் ஆரம்ப நிலைக்குத் தள்ளப்பட்டு தடங்கல் மேல் தடங்கல்கள் கண்டவர்களே அவர்களும். ஆனால் பின்னாளில் அவர்கள் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றனர் விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கையின் துணை கொண்டு.

நாம் வியந்து வாசிக்கும் சான்றோரின் வெற்றிக் கதைகள் அனைத்தும் தோல்வி, மறுப்பு, புறக்கணிப்பு, ஏமாற்றம் ஆகியவற்றின் பின்னணியிலிருந்து தோற்றம் பெற்றவையே. உலகிற்கே ஒளி கொடுத்த தோமஸ் அல்வா எடிசன் ஆயிரம் தோல்விகளிற்குப் பின்னரும் தளராத தன்னம்பிக்கையில் வெற்றி கண்டார். பலமுறை தேர்தலில் தோற்ற பின்பே அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார் ஆபிரகாம் லிங்கன். பல



பதிப்பகங்களால் நிராகரிக்கப்பட்ட பின்பே உலகமே கொண்டாடிய ஹாரி பொட்டர் எனும் நாவலை உலகிற்குத் தந்தார் ஜே.கே.ரோலிங். இவர்கள் அனைவருமே முதலில் தோல்வியைக் கண்டவர்களே ஆனால் அதனால் துவண்டு போய் விடவில்லை. இதில் நாம் காணும் வெளிப்படையான உண்மை தோல்வி என்பது முடிவல்ல, பெரும்பாலும் ஒரு பெரிய வெற்றிக்கான ஆரம்பமே.

தோல்வி வெற்றியைவிட ஒரு மனிதனுக்கு அதிகம் கற்பிக்கின்றது. நம்மை மேலும் வளர, மாற்றத்தை எதிர்கொள்ள மற்றும் சிந்தனையை வலுப்படுத்தத் தூண்டுகின்றது. நாம் தாழ்ந்து செல்கையில் நம் எல்லையைக் காட்டி பள்ளம் பார்த்து வரும் வெள்ளம்போல புதிய முயற்சிகளுக்கான ஆரம்பங்களுக்கு வலுப்படுத்துகின்றது.

வாழ்க்கை எனும் ஓட்டப் பந்தயத்தில் ஒவ்வொரு தடவை வீழ்ந்தபோதும் மீண்டும் எழுந்து ஓடிக்கொண்டே இருக்கும் இலட்சிய வீரர் நாம். மன உறுதியை என்றும் வளர்த்து சிறு தடங்கலும் எம்மைத் துவண்டுபோகச் செய்யலாகாது. மனவுறுதி பிறப்பின் போதே கிடைத்துவிடும் ஒன்றல்ல. அனுபவப் பாடத்தின் கனிகள். அது நம்மைப் பதற்ற நிலையிலும் சாந்தமாக சிந்திக்க வைக்கும், பிரச்சினைகளைத் தாங்கச் செய்யும், நம்பிக்கையை வலுப்படுத்தும்.

நாம் தேர்ந்தெடுக்கின்ற தவறான பாதைகளும் தோல்விக்கான ஒரு காரணம். ஆயினும் அதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு பொருத்தமான சிறந்த தெரிவுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள இது உந்துசக்தி கொடுக்கின்றது.

வாழ்க்கைப் பாதையில் நாம் கடந்து செல்கின்ற சிறு வழித்தடங்கல்கள் முற்றாகவும் எம் பயணத்தைத் தடுத்து விடப் போவதில்லை ஆனாலும் எம் சமூகத்தில் ஒருவரின் தோல்வியானது பார்க்கப்படும் விதம் சிறு நெருடலை ஏற்படுத்துகின்றது. தோல்வியின்போது உணரும் மிகப்பெரும் சவால் சமூகத்தின் முன் அவமானமாக உணர்வது. பிரதானமாக மாணவர்கள் இதனால் மன உளைச்சலுக்காளாகின்றனர். தோல்வியால் வரும் விமர்சனம், ஏமாற்றம் போன்றவற்றை எதிர்கொள்ள முடியாது தவறான முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோர் பலர். உண்மை நிலை என்னவெனில் சிறு தோல்வியொன்று எம்மை தோல்வியாளராக்கிவிட முடியாது. நாம் மனிதர்கள், விதிகளுக்கமைய வடிவமைக்கப்பட்ட இயந்திரங்கள் அல்லர்.

வாழ்க்கை எனும் கடலில் தோல்வி எனும் அலைகள் தவிர்க்க முடியாதது. ஆனால் நாம் அதை எவ்வாறு எதிர்கொண்டு பயணிக்கிறோம் என்பதே முக்கியம். சிலர் அதில் மூழ்கிப் போய் விடுகின்றனர், சிலர் அதில் கட்டுமரம் கட்டிப் பயணிக்கின்றனர். நாம் அனைவருமே கட்டுமரம் கட்டிப் பயணிப்பவர்களாய் இருக்க வேண்டுமே தவிர மூழ்கிப் போய் விடுபவர்களாக அல்ல.

தோல்விகள் மலையளவேயாயினும் சிறு புல் நுனியளவு கிடைக்கும் வெற்றிகளையும் மதிக்க வேண்டும். முன்னேற்றம் சிறிய அளவேயானாலும் அது முன்னேற்றமே. நாம் வீழ்ந்த போதெல்லாம் மீண்டும் எழுந்த தருணங்களை நினைத்துப் பெருமை கொள்ள வேண்டும். சிகரம் தொடுகின்ற ஆசையில் நாம் பயணத்தை ரசிக்க மறக்கின்றோம். ஆனால் உண்மையான மகிழ்ச்சி அந்த ஏறுதலில்தான். வாழ்க்கையும் அதிலிருந்து மாறுபட்டதல்ல. அனுபவங்களில், நாம் சேமிக்கின்ற சின்னஞ்சிறு நினைவுகளில், நம்பிக்கையில்தான் வாழ்வின் அழகு ஒளிந்திருக்கின்றது.

துயரம் கடக்காமல் ஓர் உயரம் கிடையாது. உயர்வு, தாழ்வு, மகிழ்ச்சி, கண்ணீர் என அனைத்தும் கலந்த முழுமையான அனுபவமே வாழ்க்கை. இப் பயணத்தினை வலுப்படுத்துகின்ற ஓர் அம்சம்தான் தோல்வி. அது நம்மை பலவீனமாக்க இடந்தராது முன்னேற்றத்துக்கான படிக்கல்லாக அதனை வைத்து இது முடிவல்ல, மிகச் சிறப்பான ஓர் ஆரம்பத்திற்கான ஓர் அடித்தளம் என்பதை நினைவில் இருத்தி வாழ்வை வளப்படுத்துவோம்.

# தேசிய மக்கள்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

சூடாக அரசியல் குழுவை கூட்டி கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கையை ராஜபக்சவினர் ஆரம்பித்திருக்கின்றனர்.

மாகாண சபைத் தேர்தல்களை இலக்கு வைத்து, பசில் ராஜபக்ச கொழும்பு திரும்ப இருக்கிறார் என்ற தகவலும் உள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு எதிரான அரசியலை, சஜித் பிரேமதாசாவின் தேசிய ஐக்கிய மக்கள் சக்தி சரியாக முன்னெடுக்காமல் போனால், ராஜபக்சவினரின் பொதுஜன பெரமுன அந்த இடத்தை நிரப்புகின்ற சூழல் தவிர்க்க முடியாது போலவே தெரிகிறது.

அவர்களை திருடர்கள் என்று அடையாளப்படுத்திய தேசிய மக்கள் சக்தி, அவர்கள் மீதான குற்றச்



சாட்டுகளை நிரூபிக்கத் தவறினால், ராஜபக்சவினரின் எழுச்சியை அவர்களால் கட்டுப்படுத்தவே முடியாது போகலாம்.






# தகாதவார்த்தைகளை தக்க வைக்காதே



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

ஒருவரது மனதைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளே தகாத வார்த்தைகள். மனதைப் புண்படுத்தக்கூடிய கெட்ட வார்த்தைகள், சமூகத்துக்கு பொருத்தப் பாடற்ற வார்த்தைகள், ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகள், கசப்பான வார்த்தைகள், வன்சொல், கூறத்தகாத வசைச்சொல், வெறுப்பேற்றும் சொற்கள், அசைபோட முடியாதவை, தூய்மையற்ற சொற்கள், உள்ளன்பற்ற வார்த்தைகள் யாவும் தகாத வார்த்தைகளே. தகாத வார்த்தைகள் பேசாதே.

நச்சுத் தன்மை உள்ளவர்களே அதிகம் தகாத வார்த்தைகளை உபயோகிப்பர். வாழ்க்கையில் அவர்களை சந்திக்கத் தவறமாட்டோம். எங்கே பேசுகிறோம்?, யாருடன் பேசுகிறோம்?, எதைப்பற்றிப் பேசுகிறோம்?, வார்த்தைப் பிரயோகங்கள் எப்படி இருக்க வேண்டும்? எனச் சிந்திக்காது பேசினால் துயரம்தான் முடிவு. தகாத வார்த்தைகளில் திட்டுவதும் குற்றமே. என்றாலும் அவ் வார்த்தைகளை தக்கவைப்பவர்கள் அதிகம்தான்.

நல்லவை நடப்பதற்கும், கெட்டவை உண்டாவதற்கும் பேசப்படும் வார்த்தைகளும் காரணம். நரிக்குணம் உள்ளவர்களிடம் இவை சரளமாக வரும். சிலர் சங்கடங்கள் வரும்போது தடுமாற்றம் அடைந்து, தடுமாறி, உணர்ச்சிவசப்பட்டு தகாத வார்த்தைகளைக் (cuss words) கொட்டிவிடுவர். உங்கள் கவனத்தை சிதற வைப்பதற்காகவும், ஆணவம் கொண்டும் பேசுவர். அழுகிவிட்ட மனித மனங்களில் இருந்து தாராளமாக வெளிவரும். பண்பாடுபற்றி அக்கறை இல்லாதவர்கள் நன்றாகப் பேசுவர். இது ஓர் அநாகரிகமான நடத்தை. இவ்வாறு பேசுவது என்பது ஒழுக்கம், நாவடக்கம், சொல்லடக்கம், சுயகட்டுப்பாடு, பண்பாடு, நாகரிகம் சம்பந்தப்பட்டது. சமீப காலமாக பேஸ்புக், டுவிற்றர், யூடியூப் போன்ற தளங்களில் பச்சையாகவும், கொச்சையாகவும் தாகாத வார்த்தைகளில் திட்டிக் கருத்திடுவது சகஜமாகி வருவதைக் காணலாம். சிலர் தொலைபேசி மூலமாகவும், கைபேசி மூலமாகவும் பேசி மிரட்டுவதும், தொந்தரவு செய்வதும் மலிந்துவிட்டது. உண்மையில் இது ஒரு தனிநபரின் மிகப்பெரிய பலவீனம் என்றுதான் சொல்ல வேண்டும். நாம் நம் கட்டுப்பாட்டில் இல்லாதபோதுதான் இவ் வார்த்தைகள் வெளிவருகிறது. மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் பேசுகிறோம். வீட்டில் சிறு பிள்ளைகள் மத்தியில் பேசும் வார்த்தைகளில் கவனம் வேண்டும். பிள்ளைகள் கெட்ட வார்த்தைகள் (profanity) பேசுகிறார்கள் என்றால் அவர்கள் வீட்டில் கேட்ட வார்த்தைகளையே பேசுகிறார்கள் என்பதை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும்.

கெட்ட வார்த்தை என்று ஏன் சொல்கிறோம்? அவை நம்மை, நம் குணத்தை ஏதோ ஒரு வகையில் பாதிக்கிறது. எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும், என்ன நன்மைகள் செய்தாலும் ஒரு தகாத வார்த்தை அவரைப் பற்றிய நம் எண்ணத்தை முற்றிலும் மாற்றிவிடும். நம்மைச் சுற்றிலும் அவ்வார்த்தைகள் நன்றாகப் புழங்குகின்றன. தொடர்ச்சியாக ஒருவரை இப்படியாகப் பேசுவது அவரைத் துன்புறுத்துவதாகவே அமையும். இவற்றைப் பயன்படுத்துவதால் பாதிப்புக்களே அதிகம். உங்களை வீழ்த்தும், உங்களை சாய்க்கும், கீழே இறக்கும், பலத்தைக் குறைக்கும், தோக்கவைக்கும், வெறுப்புணர்ச்சி அதிகரிக்கும், பலர் விரும்ப மாட்டார்கள், வன்சொல் சிறுமை பொருந்தியது, மற்றவர்கள் இவர்மேல் காழ்ப்புக் காட்டுவர், அறம் வளராது, இன்ப வாழ்வு இம்மையிலும், மறுமையிலும் கிடைக்காது, நன்மைக்கு இடமில்லை. சில தகாத வார்த்தைகள் வாழ்க்கையைக் கொல்லும்.

புயலும், கோபமும் ஒன்றுதான். வீசும் போதும், பேசும்போதும் தெரியாது, அடங்கிய பிறகுதான் தெரியும் அடைந்த சேதம் என்னவென்று. தகாதவார்த்தைகளால் ஒருவரது மானம் போகிறது என்பதை உணராமல் பேசுவார்கள். உன் வார்த்தை ஒருவனுக்கு தாகம் தணிக்கக் கூடியதாக இருக்கவேண்டுமேயொழிய கேடு விளைவிக்கக் கூடாது. தகாத வார்த்தைகளை பலர் தமது மனதில் சுமக்கின்றனர். தலையில் சுமக்கும் பாரத்தைவிட மனதில் சுமக்கும் பாரத்திற்கே வலியும், தூரமும் அதிகம். வார்த்தைகள் விலைமதிப்பு இல்லாதவை. தகாதவார்த்தைகளால் ஏற்படும் வலி என்பது, ஒரு நொடியில் ஏற்படுவதுதான். சில வலிகள் மறைய மறுக்கிறது, பல வலிகள் மறைய காலம் எடுக்கிறது. கோபம் அதிகம் வந்தாலும் வார்த்தைகளை உதிர்த்துவிடாதீர்கள். விழும் அடிகள் தரும் வலியைவிட உதிரும் வார்த்தைகள் தரும் வலிகள் மிக அதிகம். மரணம்வரை வலியை சுமக்க மனம் ஒன்றும் மண்ணல்ல. சொறிநாய் கண்டபாட்டிற்கு யாரையும் குரைக்கும், கடிக்கும். இது கடித்தால் அதை திருப்பிக் கடிக்க முடியாது.

“பொறாமை, பேராசை, கோபம், பிறர் மனம் புண்படும்படி பேசுதல் நான்கும் உன் விரோதிகள்” என்றார் பெர்னாட்ஷா. தகாதவார்த்தைகளால் பலரை அழ வைக்கின்றனர், அவமானப்படுத்துகின்றனர். பிறரை அழவைப்பவர்கள் தங்கள் கண்களிலும் கண்ணீர் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. பிறரது அவமானத்தில் மகிழ்ச்சி கொள்பவர்கள் தாங்களும் அந்த சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்க வேண்டும்” என்கிறார் கவியரசர் கண்ணதாசன். அவமானங்களும் அவ்வப்போது மனிதனுக்குத் தேவைதான், இல்லையாயின் மானம் என்ற ஒன்றை மனிதன் மறந்து விடுகிறான். “வாக்கியத்துக்கு எது அலங்காரம்? சத்தியமான வார்த்தைகளே” என்கிறார் வாரியார். தகாதவார்த்தைக்குக் கவலைப்படுவது நேரத்தை வீணாக்குவதாகும். சிலர் பேசுவதைப் பேசிவிட்டு பரமயோக்கியன்மாதிரி சமூகத்தில் வலம்வருகிறார்கள். நம்மை சிதைக்க எனத்தான் இவற்றைப் பேசுகிறான், தனது நிம்மதிக் காகத்தான் பேசுகிறான் என்பதை நீ புரிந்துகொண்டால் பொறுமையைக் கடைப் பிடிக்கலாம், மௌனமாய் இருக்கலாம். நம்மை தோற்கவேண்டும் என நினைப்பவர்களுக்கு முன் தோற்கக் கூடாது. அவனைவிட்டு விலகவேண்டும்.



நாக்கு ஒரு தீ. ஆக்கவும், அழிக்கவும் வல்லது. கவனமாகப் பயன்படுத்துங்கள். வீசுகின்ற வாசனையைப் பொறுத்துத்தான் மலர்களுக்கு சிறப்பு சேரும். பேசுகின்ற வார்த்தையைப் பொறுத்துத்தான் மனிதர்க்கு மதிப்பு உயரும். அறிவாளியாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தை விட யாரையும் அறியாமல் காயப்படுத்தி விடக்கூடாது என்ற நோக்கமே சிறந்தது. எதைச் சொல்வதாக இருந்தாலும் நாகரிகமாகச் சொல்லவேண்டும். முடியவில்லை, பேசிய பின்னராவது அதை உணர்ந்து மன்னிப்பு கேட்பது பெருந்தன்மை. மன்னிப்பு கேட்கையில் நீ புனிதம் அடைகிறாய். மன்னிப்பு வெறும் வார்த்தை அல்ல. அது ஒரு பாதிக்கப்பட்ட மனதின் எதிர்பார்ப்பு. சவாலான வார்த்தைகளைக் கேட்ட பின் கவலை கொள்ளாதே. உங்கள் மனதை உங்கள் வசமாக்க வேண்டும்.

குணமும், பணிவும் உன்னை வாழ வைக்கும். பறவை எவ்வளவு தூரம் வானத்தில் பறந்தாலும் கூடு மரத்தில்த் தான். சிலர் ஆணவம்கொண்டு தாண்டவம் ஆடினாலும் மரணம் வந்தால் மண்ணில் தான். வாழ்க்கையில் யார் தந்த வலிக்காகவும் கண்ணீர் விடாதே. அன்னப் பறவை நீரையும், பாலையும் பிரிப்பது போல் அறிவுள்ள நல்ல மனிதர்களுடன் நட்புக்கொள். எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக்கொள். தாகாதவார்த்தைகள் தங்க இடம் கொடுக்காதே. “தைரியம், புத்தி, நற்பண்பு மூன்றும் ஒருவருக்கு நல்ல நண்பர்கள்” என்றார் லாங்பெல்லோ. கோபத்தில் பொறுமை இழக்காதே, கவலையில் கண்ணீர் விடாதே, பழகியவரைப் பாதியில் விடாதே, விலகியவரை தேடிச்செல்லாதே, வேகத்தில் வார்த்தைகளை விடாதே. யார் கவிழ்த்தாலும் சமநிலைக்கு வாருங்கள். தகாதவார்த்தைகள் உங்களை ஒன்றும் செய்துவிடாது. அவற்றை தக்கவைக்காதே.

நாளடைவில் சில வார்த்தைகள் நம்மை காயப்படுத்தவேண்டிய அவசியமில்லை, மாறாக அதை பேசியவர்களுக்குத்தான் அவமானமாக இருக்கவேண்டும் என்று தோன்ற ஆரம்பிக்கும். சமூகத்தைப் பொறுத்தவரையில் அதைப் பேசுவது தவறாகவும், ஒழுக்கக்கேடாகவும் சித்தரிக்கப் படுகிறது. கோபத்தில் பேசுவது இயல்பு என்றும் சிலர் கூறுவர். ஆனால் அப்படிப் பேசுவது ஒருவரை மனதளவில் எவ்வளவு பாதிக்கிறது என்பதோ, உளவியல் ரீதியாக நீண்டகாலம் பாதிப்பு இருப்பதையோ தெரிந்துகொண்டாலோ, யோசித்துப் பார்த்தாலோ அவ் வார்த்தைகளை நாம் பயன்படுத்த மாட்டோம்.

“பேச்சில் கணக்காக இருந்தால் வாழ்வில் பிரச்சனை குறையும்” என்கிறார் காஞ்சிப் பெரியார். “எங்கே சென்றாலும் நல்ல வார்த்தைகளை பயன்படுத்தத் தெரிந்தவனே சிறந்தஞானி” என்கிறார் அப்துல்கலாம். நாம் ஒரு மனிதனாக எப்படி இருக்கிறோம், எப்படி வளருகிறோம் என்பதை நம் மொழிதான் நமக்குக் காட்டுகிறது. ஒரு மொழியில் உங்களுக்கு என்ன தெரியும் என்பது, அம்மொழியுடன் உங்களுக்கு இருக்கும் உறவைக் காட்டுகிறது. “இன்சொல் என்ற கனி இருக்கும்போது ஒருவர் ஏன் இன்னாச் சொல் எனும் பழுக்காத காயை எடுத்து நுகர வேண்டும்”? என்கிறார் வள்ளுவர். பதில் உங்களிடம்தான்.



# நானிலம் போற்றும் நட்பு - 66



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது இன்னா நாற்பதின் இருபத்து நான்காம் செய்யுளிற்குச் செல்வோம்.

“ஏமமில் மூதூ ரிருத்தன் மிகவின்னா
தீமை யுடையா ரயிலிருந்த னன்கின்னா
காமமுதிரி னுயிர்க்கின்னாவூ வாங்கின்னா
யாமென் பவரொடு நட்பு.”

இந்தச் செய்யுளில் ‘ஏமம்’ என்ற சொல் காவல் என்றவாறும், ‘மூதூர்’ என்ற சொல் ‘பழைய ஊரில்’ என்றவாறும் கருதவேண்டும் என்று உரையாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்தச் செய்யுளின் முதலடியில் “ஏமல் இல் மூதூர் இருத்தல் மிக இன்னா” என்பது காவல் இல்லாத பழைய ஊரில் வாழ்தல் துன்பத்திற்குரியது என்பதைச் சொல்லு கின்றது. மக்கள் துன்பமின்றி வாழ்வதற்கு ஊரின் பாதுகாப்பு அவசியமாகின்றது. இந்தக் காலங்களில் மக்களின் நலனுக்காக காவல் செய்ய வேண்டியவர்களாலேயே அதிக துன்பம் மக்களுக்கு ஏற்படுகின்றது. வேலியே பயிரை மேய்ந்து விடுகின்ற நிலைமை பல நாடுகளில் காணப்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது. நாங்கள் வாழ்கின்ற இடத்தில் அயலவர்கள் தீய செயல்களைப் புரிபவர்களாக இருந்தால் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டி வரும் என்பதைப் புலவர் செய்யுளின் இரண்டாம் அடியில் “தீமை யுடையா ரயிலிருந்த னன்கின்னா” என்றவாறு குறிப்பிடுகின்றார். எங்குமே வன்செயல்கள் நிறைந்த இந்தக் காலத்திற்கு மிகவும் ஏற்ற ஒரு கூற்றாகவே இது காணப்படுகின்றது. இந்தச் செய்யுளின் மூன்றாவது அடியில் “காமமுதிரி னுயிர்க்கின்னாவூ வாங்கின்னா” என்று வருவது எக்காலத்தும் பொருந்தும் விடயமாக காமநோய் முற்றினால் உயிர்க்குத் துன்பமாகும் என்பதைக் குறிப்பதாக உரையாசிரியர் கள் விளக்கியுள்ளனர். இன்னா நாற்பது என்ற அற்புதமான இலக்கியப் புதையலில் எங்கள் வாழ்க்கைக்குத் துன்பம் தரும் விடயங்கள் எல்லாம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்பதிற்கு இது மேலும் ஒரு வலுவான ஆதாரமாகும். மேற்குறிப்பிட்டுள்ள மூன்று கருத்துகளையும் தாங்கிவரும் இந்தச் செய்யுளின் ஈற்றடியில் “யாம் என்பவரோடு நட்பு” என்று வருவது “நான், எனது என்பாரோடு தங்கியிருத்தல் துன்பத்திற்குரியது” என்ப தைச் சொல்வதாக உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். புலவர் அந்தக் காலத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டிருப்பது ஆச்சரியத்திற்குரியது. எவ்வாறாயினும் இந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பங்களில் நிலவும் சர்ச்சைகளைக் கவனிக்கும் பொழுது புலவரின் தனிக்குடித்தனச் சார்பு மிகவும் பொருத்தமானதாகவே எனக்குத் தெரிகின்றது. ஆனால் சில குடும்பங்கள் இதில் விதிவிலக்காகக் கூட்டுக் குடும்பமாகச் சிறப்புடன் வாழ்கின்ற நிலைமை இன்னும் உண்டு என்பதையும் நாங்கள் கருத்திற் கொள்ளத்தான் வேண்டும்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி தொண்ணூற்றி மூன்றாவது பாடலைக் கவனிப்போம். இது அரிசில் கிழார் என்னும் புலவர் பாடிய பாட்டு. இது தலைவியின் இல்லற வாழ்வைக் காணச் சென்ற தோழியிடம் தலைவி தலைவனுடைய அன்பைப் பற்றி அறிவிப்பது பற்றிய செய்யுள்.

காதலித்துக் களவு மணம் செய்து கொண்ட மணமக்கள் இருவர். அவர்கள் இப்பொழுது கற்பு மண வாழ்விலே வாழ்கின்றனர். பலரும் பாராட்டும்படி இல்லறம் நடத்துகின்றனர். அவர்களுடைய மனைவாழ்க்கையைக் கண்டு மகிழ்வதற்காக, தோழி அவர்கள் வீட்டுக்குச் சென்றிருந்தாள்.

தலைவியின் சிறந்த நடத்தையைக் கண்டு மகிழ்வடைந்தாள். ‘நீ மணந்து கொள்ளும் நாள் வரையிலும் பொறுமையுடன் இருந்தாய் உன் கற்பையும், அழகையும் காப்பாற்றிக் கொண்டிருந்தாய் என்று பாராட்டிப் பேசினாள். உடனே தலைவி ‘நான் பொறுத்திருந்ததற்குக் காரணம் என்னுடைய வலிமையன்று. தலைவன் என்னிடம் அன்புள்ளவன், இரக்கமுள்ளவன். அவன் என்னிடம் காட்டிய நீங்காத கருணைதான் எனது பொறுமைக்குக் காரணம். எனது பெண்மை நலம் அழியாமலிருந்ததற்குக் காரணம் என்று மறுமொழியுரைத்தாள். இதன்மூலம் தனது அடக்கத்தையும், சிறந்த பண்பையும் காட்டிக் கொண்டாள்.

“மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன,
இட்டு வாய்ச்சுனைய, பகுவாய்த் தேரை,
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெடுந் தோளே
இன்றும் முல்லைமுகை நாறும்மே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“தோழியே, மலைநாட்டையுடைய என் தலைவன் சிறந்த பண்புள்ளவன். அவனுடைய நாட்டு மலையிலே பல சிறிய சுனைகள் உண்டு. அச்சுனைகளின் வாய்கள் மிகவும் குறுகியிருக்கும். அவை கள்ளை ஊற்றி வைத்திருக்கும் நீலக் குப்பியைப் போலக் காணப்படும். அச்சுனையின் உள்ளே பிளந்த வாயையுடைய தவளைகள் இருக்கும். அவை, தினைப்புனத்திலே, கிளிகளை ஓட்டுகின்ற மகளிர் அடிக்கும் தட்டைப் பறையின் ஓசையைப் போல் கத்திக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மலை நாட்டையுடைய தலைவன் அவன்”. என்றாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிதொண்ணூற்றிநான்காவது பாடலைக் கவனிப்போம். இது கோவர்த்தன் என்னும் புலவர் பாடிய பாட்டு. கார்ப்பருவத்தைக் கண்ட தலைவி. தனது துக்கத்தைத் தோழியிடம் உரைத்தது. இது முல்லைத்திணை சார்ந்தது.

தலைவன், கார் காலத்திலே வந்துவிடுகின்றேன் என்று சொல்லிவிட்டுப் பொருள் தேடப் போனான். கார்காலம் வந்து விட்டது. கார்காலம் வந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அதைக்கண்ட தலைவி, தலைவனை இன்னும் காணவில்லையே என்று வருந்தியிருந்தாள். அவள் வருந்துவதைத் தோழி உற்று நோக்கினாள். உடனே அவளிடம், தான் வருந்துவதற்கான காரணத்தைத் தலைவி எடுத்துரைத்தாள். இந்த நிகழ்ச்சியை உரைப்பதுதான் இச்செய்யுள்.

> “There is nothing on this earth more to be prized than true friendship.”
> - Thomas Aquinas

“என் எனப் படுங்கொல் தோழி! மின்னுவர
வான் ஏர்பு இரங்கும் ஒன்றோ? அதன் எதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்கு என்
பேதை நெஞ்சம் பெரு மலக்கு உறுமே?”

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
